கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

# சங்கச் சங்கதிகள்



பதிப்பு 3 – **ஆடி 2022**
w: canberratamilassociation.org.au e: cta1983@hotmail.com.au

## தலைமைக் குறிப்பு

கான்பெரா தமிழ் சங்க அங்கத்தவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் வணக்கம்.

உங்கள் சங்க அங்கத்துவத்தைப் புதுப்பித்து விட்டீர்களா?

அங்கத்துவமும், அங்கத்தவர் பங்களிப்பும் எந்தவொரு நிறுவனத்துக்கும் உயிர்நாடி, முதுகெலும்பு! எம்போன்ற, இலாப நோக்கற்ற, பண்பாட்டு நிறுவனங்கள், வலுவான அங்கத்துவமின்றி இயங்கவேமுடியாது. உங்கள் ஆதரவுக்கு மனமார்ந்த நன்றிகள்.

ஒரு அமைப்பில் இணைய, அங்கத்துவத்தைத் தொடர, பதிலுக்கு எதிர்பார்க்கும் பெறுமதி அங்கத்தவர்களுக்குக் கிடைப்பது அவசியம். இதை உள்வாங்கி, ஒரு அமைப்பு அதன் அங்கத்தவர் எதிர்பார்ப்பை முடிந்தவரை பூர்த்தி செய்வது அவசியம்.

ஆனால், இது ஒரு இருவழிப் பயணம் போன்றது. அந்த வகையில், நடப்பு நிர்வாகக் குழு, நீங்கள் தந்த ஆலோசனைகளைப் படிப் படியாக நடைமுறைப் படுத்தி வருகிறது. நீங்களும் பாதித்தூரம் வந்து இணைந்துவிட்டால் மட்டுமே சேர்ந்து எம் இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.

இதுவரை அங்கத்துவக் கட்டணம் செலுத்திய அனைவருக்கும் நன்றி! செலுத்தாதவர்கள், உங்கள் பங்களிப்பைச் செய்ய இதுவே தருணம். கட்டிவிட்டோமா இல்லையா என்று சந்தேகமென்றால், மின்னஞ்சல் ஒன்றை அனுப்புங்கள். அறியத்தருகின்றோம்.

உங்களுக்குத் தெரியுமா? கான்பரா தமிழ் சங்கத்தின் ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் கணிசமான நேரத்தை அங்கத்துவக் கட்டணம் செலுத்த வைப்பதிலேயே செலவிடுகிறது. இருந்தும் கூட பலரின் அங்கத்துவம் பல ஆண்டுகளாக நிலுவையிலேயே இருப்பது சிறப்பானதல்ல!

ஒவ்வொரு ஆண்டும் அங்கத்துவக் கட்டணம் செலுத்துவது தொந்தரவாக உள்ளதா?

ஆயுட்கால அங்கத்துவத்தைக் (life membership) கொண்டு வரலாமே என்ற ஆலோசனை கிடைத்திருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்தை அறியத் தாருங்கள்!

தெய்வலிங்கம்

## இனிவரும் எங்கள் நிகழ்வுகள்

**இன்பத் தமிழ் விழா**
Sat, 23 July 4:15pm
Melrose High School
Marr St, Pearce

**இசைக்கதம்பம்**
**ஸ்ரீமதி அனுராதா கிருஷ்ணமூர்த்தி**
Sun, 4 September 5pm
Hawker College Theatre
51 Murranji St, Hawker

**CTA வருடாந்த பொதுக் கூட்டம்**
Sun, 10 September 5:30pm
Canberra Seniors' Centre, Turner

**Bunnings BBQ (Fundraiser event)**
Sat, 17 September (All-day)
Bunnings Belconnen

**CTA தீபாவளிக் கொண்டாட்டம்**
Sat, 19 Nov 5pm
Venue to be advised

**POSTPONED**

Dinner to raise funds for Tears of Vanni, planned for 6 August 2022, has been postponed until further notice due to concerns raised by members/well-wishers around the current surge in COVID-19 cases in Canberra.

## கண்டு பிடியுங்கள் கையை கண்டு பிடியுங்கள்!

1 . பெண்களுக்கு மிகவும் பிடித்த கை.

2 . இளையவள் ஒருத்தி, மூத்தவள் ஒருத்தி. மொத்தமாக 2 கைகள்.

3 . தரமான நிகழ்ச்சிக்குத் தேவையான கை.

4 . தலையில் இக்கை இல்லாவிடில் இந்தக்கை வந்துவிடும்

5 . கொடுப்பவரை ஏழையாக்காமல், பெறுபவரை செல்வந்தன் ஆக்கும் கை.

6 . எல்லோரிடமும் இருக்கவேண்டிய கை.

7 . அனைவரும் கொண்டாடும் கை.

8 .சிலர் எதிர் காலத்தை இதில் தேடுவர்.

9 . குழந்தைகளின் ஆயுதம் இது.

10 . மூன்றெழுத்து கை இது, முதலும், மூன்றும் நட்புக்கு எதிரியாகும், முதலும் இரண்டும் சேர்ந்து நிறைய தரும். மூன்றும் சேர்ந்தால் இருக்க உதவும்.

உங்கள் பதில்களை cta1983@hotmail.com.au மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். சரியான பதில்களை அனுப்பும் முதல் மூன்று நபர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

# மனதுக்கினிய மாலை 2022



நிகழ்வின் நிழல்கள்!

## மனதுக்கினிய மாலை - அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் மாலை

- சுகுமார்

கான்பரா தமிழ் சங்கம், மனதுக்கினிய மாலை நிகழ்ச்சியை 26 ஆனி 2022 ஞாயிறு அன்று Isaacsல் ஒழுங்கு செய்திருந்தது. அமலாவும் நானும் அன்றைய தினம் ஓய்வாக இருந்ததனால், இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தோம்.

இந்த நிகழ்வில் பங்குபற்றியதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

மனதுக்கினிய மாலை, தேனீர் மற்றும் சிற்றுண்டி அருந்தலைத் தொடர்ந்து, சில வேடிக்கை விளையாட்டுக்களுடன் தொடங்கியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, கலந்துகொண்டவர்களுக்கு, வந்திருந்த மற்றைய நண்பர்களைச் சந்தித்துக் கலந்துரையாட நிரம்பவே நேரம் இருந்தது. இப்படியான ஒரு ஒன்றுகூடலை கான்பராவில் நாங்கள் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டதால், வந்திருந்த அனைவரும் முழுமையாக இரண்டரை மணி நேரமும் மிகவும் உற்சாகமாக அரட்டை அடித்துக்கொண்டும் கேலிக் கதைகள் பேசிக்கொண்டும் இருந்ததைக் காண மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருந்தது.

பங்குபற்றியவர்களின் கணிப்பில், நடந்த மனதுக்கினிய மாலை நிகழ்ச்சி பற்றிய மதிப்பீடு (evaluation), வடிவம்/கட்டமைப்பு (structure) மற்றும் எதிர்வரும் மனதுக்கினிய மாலை நிகழ்ச்சிகளுக்கான கால இடை வெளி (frequency) பற்றிய கருத்துப் பரிமாற்றத்தோடு மிகவும் அருமையான மனதுக்கினிய மாலை முடிவுக்கு வந்தது.

எங்கள் மனமார்ந்த நன்றிகள்...
சேகர், விஜி, அனிதா மற்றும் ராகவன் - விளையாட்டுக்களை வழங்கியமைக்காக!
எல்லா நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் - இந்த அருமையான மாலை நேர நிகழ்வை ஒழுங்கு செய்தமைக்கும் சிற்றுண்டி/தேனீர் வழங்கியமைக்கும்!!

சபாஷ் நிர்வாகக் குழு! அடுத்த மனதுக்கினிய மாலைக்காகக் காத்திருக்கிறோம்.



# மகிழ்ச்சி தந்த மனதுக்கினிய மாலை

*திருமதி ஷியாமளா துருவாசன்*

24 -06 -22 அன்று கான்பரா தமிழ்ச் சங்கத்தின் 'மனதுக்கு இனிய மாலை' நிகழ்ச்சி தமிழ் மூத்தோர் சங்க மண்டபத்தில் நடை பெற்றது. எனது குடும்பத்துடன் நான் அங்கு சென்றிருந்தேன். அன்று தலைப்பை போலவே அது ஒரு மனதுக்கு இனிய மாலையாகவே அமைந்தது. எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் விளையாட்டுக்கள் ஒழுங்கு படுத்தியிருந்தார்கள். சிறுவர்கள் ஒரு பக்கத்தில் Jenga மற்றும், வெட்டிய படங்களை ஒழுங்கு படுத்துதல் போன்ற விளையாட்டுக்களை விளையாட, பெரியவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து இசைக்கேற்ற பாடல்களைக் கண்டு பிடித்தல், காட்சிக்குரிய படங்களைக் கண்டு பிடித்தல், குழம்பியிருக்கும் தமிழ்ச் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் உருவாக்குதல் போன்ற விளையாட்டுக்களை விளையாடினர். இரு பகுதியினருக்கும் இடையில் கடும் போட்டிதான் நிகழ்ந்தது. வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசில்களும் கிடைத்தன.

சங்க அங்கத்தவர்கள் தயாரித்து வந்த சிற்றுண்டிகள் மிக வாய்க்கு ருசியாக இருந்தன. நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்ததாலோ என்னவோ எல்லோரும் மிக சந்தோசமாக இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். முதல் முறையாக நடந்த இந்த நிகழ்ச்சி, தொடர்ந்தும் நடக்க வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக்கொண்டார்கள். இவ்வாறான சிறு நிகழ்ச்சிகள் எல்லோரையும் மீண்டும், மீண்டும் வரத் தூண்டும் என்று நான் நம்புகிறேன். இந்த வேளையில் கான்பராத் தமிழ் சங்கத் தலைவருக்கும் அவரது நிர்வாகக் குழுவினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மண்ணின் வாசனை

- சுசீலாதேவி கணேசசுந்தரம் & சாந்தகௌரி சிதம்பரநாதன்




அமைதியான சூழல், பதட்டமில்லா வாழ்வு, பாடசாலைப் படிப்புடன் பெற்றோருக்கு இயன்ற உதவிகள் செய்து இலங்கை வானொலியில் தமிழ் சினிமாப் பாடல்களைக் கேட்டு ரசித்து, மாலையில் விளையாட்டுக்கள் விளையாடி, இரவில் வீட்டுப் பாடங்களை செய்து முடித்து நல்ல நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்து விடுவதுதான் அன்றாட வாழ்க்கை என்றிருந்தோம்.

பாடசாலைப் போக்குவரத்துக்கு பலவித வழிகள் இருந்தன. வசதி படைத்தவர் வாடகைக் கார்களிலோ அல்லது சொந்தக் கார்களிலோ வந்தனர். சிலர் அரச பேருந்துகளிலும், சிலர் துவிச்சக்கர வண்டிகளிலும் வேறு சிலர் மாட்டு வண்டில்களிலும் கூட பள்ளிக்கு வந்தனர். பாடசாலைக்கு அருகில் வீடு இருந்தால் கதைகள் பேசிச் சிரித்து கலகலப்பாக நடைப் பயணமாகவே வீட்டுக்கு வருவதும் சிலருக்கு வாய்த்தது.

மாலையானதும் கூடி விளையாட ஊஞ்சல், எட்டுக்கோடு, கிட்டிப் புள்ளு, தாயம் உருட்டல் , கொக்கான் வெட்டுவது, கோலிக்குண்டு விளையாட்டு, கயிறடித்தல், விறகு அடுப்பு மூட்டி சின்ன சின்ன பாத்திரங்களில் சமையல் செய்து அதைச் சேர்ந்தே சாப்பிடுவது என்று பலவித விளையாட்டுக்களில் பெண் பிள்ளைகள் பொழுதைக் கழிக்க, ஆண்பிள்ளைகளோ தாமே பலகையினால் தயாரித்த கிரிக்கட் மட்டை கொண்டு கிரிக்கட் விளையாடுவது, காற்பந்தாட்டம், கைப்பந்தாட்டம் விளையாடுவது, பட்டங்களைப் பறக்க விடுவது, ஆழமில்லாத கடல், கேணிகளில் நீச்சல் அடிப்பது என்று சுவாரஸ்யமான விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்தனர்.

பாடசாலை விடுமுறை நாட்களில் குயில் கூவும் மாமர நிழலின்கீழ் அமர்ந்து தோழர், தோழிகளுடன் மாங்காய் பறித்து உண்டதும் ஒரு தனி இன்பம். கோயில், தேவாலயங்களில் திருவிழாக்கள் நடக்கும் போது விடிய விடியத் திருவிழாக்களை பார்த்து விட்டு அடுத்த நாள் பாடசாலைக்கு மட்டம் போட்டு விட்டு வீட்டில் கும்பகர்ணத்தூக்கம் போட்டதும் உண்டு. பண்டிகை நாட்களில் அம்மா தரும் பலகாரப் பொட்டலங்களுடன் உறவினர் வீடு சென்று அவர்கள் தரும் கை விஷேசங்களைப் பெற்று வருவதிலும் ஒரு ஆனந்தம்.

வீடுகளில் இடும் வேப்பம்பூ வடகத்தின் வாசனையை நுகர்ந்து பார்ப்பதிலும் , சுத்தமான பாயில் காயப்போடும் பனாட்டு, அவித்த பனங்கிழங்கை ருசி பார்ப்பதிலும் அலாதி ஆனந்தம். வீட்டில் வளர்க்கும் பசுவின் சுடச் சுடக் கறந்த பாலில் கலந்த கோப்பி, தேநீரிலும் வயலில் விளையும் காய்கறி கொண்டு ஆக்கிய உணவின் சுவையிலும் திளைத்திருந்தோம்.

நல்ல திரைப்படங்கள் அரங்குகளில் வந்தால் தவறாது பார்த்து வீட்டுக்கு வந்து அது பற்றி விமர்சனங்களை அலசி ஆராய்ந்து, படுக்கைக்குப் போக முன் ஒரு பட்டி மன்றமே வைத்து விடுவோம். இதை விட எம்மில் பலரும் தமிழ் மாத, வார சஞ்சிகைகளைப் போட்டி போட்டுக் கொண்டு வாசித்தும் அதில் லயித்தும் இருந்திருக்கிறோம்.

காலம் மாறிவிட்டது. மனிதனும் மாறிவிட்டான். ஆனால் உலகின் எந்தப் பகுதியிலும் நாம் வாழ்ந்தாலும் அந்த மண்ணின் நினைவுகள் எம்முடன் நீங்காது நிறைந்திருக்கும். இன்று எங்கள் தாய் மண்ணில் அன்று நாம் நுகர்ந்து அனுபவித்த மண்ணின் வாசனைத் துளிகளை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்வடைகிறோம்.

# கவிதைப் பெட்டகத்தில் இருந்து... - *ஆழியாள்*

கான்பெராவில் இப்போது உறைகுளிர் காலம். அதிகாலை இருளும், மலைமுகடுகளை மறைக்கும் பனிமூட்டமும், குளிரும் ஏதோ ஒருவிதத்தில் தாயகத்தின் மார்கழி மாதத்தை நினைவுக்குக் கொண்டுவருகிறது. மார்கழி மாதத்தைப் பற்றி, மு.பொ என்று வாஞ்சையுடன் அழைக்கப்படும் மு.பொன்னம்பலத்தின் பெயர்போன கவிதை **மார்கழிக்குமரி.**

முபொவின் மார்கழிப்பெண் கார்முகத்தை உடைய குமரிப்பெண். அவள் ஊரைச் சுற்றி வலம் வருகிறாள். அவள் வருகையால் நீர்நிலைகள், விளைநிலங்களெல்லாம் செழித்துக் கொழிக்கின்றன. இயற்கையும், பல்லுயிர்களும் மகிழ்ந்து உற்சாகத்துடன் இயங்குகின்றன.

'வயலில் வேல்முனைக் கதிர்களை' பறவைகள் அறுவடை செய்கின்றன. திருவெம்பாவை மற்றும் திருப்பாவை பாடுபவர்களின் அமுதகீதம், ஆலயமணி ஓசையில் தோய்ந்து அவ்வூரே 'களி' கொள்கிறது. அவளின் உலா 'தைவழி' நோக்கி - புதிய தொடக்கத்தை முன்னோக்கிப் போவதாக கவிதை முடிகிறது.

இது ஈழத்துக் கவிதைப்பரப்பில் தெவிட்டாத சுவைகொண்ட கவிதைகளுள் ஒன்றாகவும், மார்கழிக்குமரிக்கான கவிஞரின் வாழ்த்தாகவும் அமைகிறது.

## மார்கழிக்குமரி

**மார்கழிக் குமரி கார்முகச் செல்வி**
**ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்**
**பனிநனை தென்றல் முனைபடத் தளிரின்**
**கனவுகள் அதிரும், காதலின் இறுக்கத்**
**தேவைகள் மலர்ந்து ஆசையில் நடுங்கத்**
**தாதினைத் தள்ளும் போதுகள் நடுவே**
**மார்கழிக் குமரி கார்முகச் செல்வி**
**ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!**

**ஆழியின் அலைகள் கீழிழுத் தடங்க**
**தோளினில் சுமந்த பாயோடு கலங்கள்**
**ஊர்மனை நடுவே உறங்கிய வாவி**
**நீர்விடு மூச்சாய் நெளிதரு தரங்கம்**
**நாரைகள் கரையில் நாட்டிய தவமும்**
**தேரைகள் வரம்புள் தேக்கிய குரைவும்**
**சீரெனக் கொண்டு மார்கழிக் கோதாய்**
**ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!**

**ஏரோடு முன்னர் இயற்றிய புணர்வு**
**சூல்தர வயலில் வேல்முனைக் கதிர்கள்**
**அறுவடை புரியும் பறவைகள் திகில**
**வெருளிகள் புரியும் அபரித நடனம்**
**நுளம்புகள் மலிந்து வலம்புரி ஊத**
**புலன்சிறு உயிரும் வலம்வர மகிழ்ந்து**
**மார்கழிக் குமரி கார்முகச் செல்வி**
**ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!**

**விளக்கிய முற்ற ஒளித்தரை மீதில்**
**பளிச்செனக் கோல வெளிச்சங்கள் தூய,**
**பாவையர் பாடும் "பாவையின்" கீதம்**
**ஆலயமணியின் ஓசையில் தோய**
**வையகம் எங்கும் ஐயனின் பாதம்**
**கொய்மலர் என்றோ குனிந்தது சூட?**
**மையிருள் அகற்றும் தைவழி நோக்கி**
**மார்கழிக் குமரி கார்முகச் செல்வி**
**ஊர்களி கொள்ள உலாவரு கின்றாய்!**

**-மு.பொன்னம்பலம்-**

## பாராட்டுக்களும்! வாழ்த்துகளும்!!







கனடாவிலுள்ள 'தமிழ் இலக்கியத் தோட்டம்' என்ற அமைப்பு கடந்த இருபது வருடங்களாக தமிழ் இலக்கியப் படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்து வருகிறது. இந்த அமைப்பு 2021 ம் ஆண்டுக்குரிய கவிதைக்கான விருதை கான்பராவாழ் ஆழியாள் (மதுபாஷினி ரகுபதி) அவர்களுக்கு 'நெடுமரங்களாய் வாழ்தல்' என்ற அவரது கவிதைத் தொகுப்புக்காக வழங்கி கௌரவித்துள்ளது. இத்தருணத்தில் கான்பரா தமிழ்ச் சங்கம் ஆழியாளுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவதுடன், அவரது தமிழ் இலக்கியப் பணி தொடர வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறது. ஆழியாள் இதற்கு முன்னரும் 'உரத்துப் பேச', 'துவிதம்', 'கருநாவு', 'பூவுலகைக் கற்றலும் கேட்டலும்' ஆகிய கவிதை தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## The monk who sold his Ferrari

### - அனிதா ஜெயசிங்கம்

இந்த புத்தகத்தை வாசித்துள்ளீர்களா? இல்லாவிட்டால் இது எல்லோரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய ஒரு சுய உதவி நீதிக்கதையாகும் (self-help fable).

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் Robin Sharma என்ற ஒரு வழக்கறிஞர் தனது 25 வது வயதில் தொழிலில் தனக்கு ஒரு திருப்தியும் நிம்மதியும் கிடைக்கவில்லை என்று எழுதத் தொடங்கினார். அவரது இரண்டாவது புத்தகம் தான் The Monk Who Sold his Ferrari. அது சர்வதேச அளவில் பிரபல்யம் அடைந்ததால், அவர் முழு நேர எழுத்தாளராக மாறியதுடன் ஒரு ஊக்கமூட்டும் பேச்சாளராகவும் (motivational speaker) மாறி விட்டார். எனது நண்பிகள் இந்தப் புத்தகத்தைப் பற்றிச் சொன்னபோது அப்படி என்னதான் இருக்கு என்று பார்க்கவே இதை வாசித்தேன். இன்று உங்கள் எல்லோரையும் வாசிக்க சொல்கிறேன் என்றால் அதற்கு காரணம் இருக்கிறது.




Julian Mantle என்னும் ஒரு மிகப் பிரபல்யமான, பணக்காரனான ஒரு வழக்கறிஞர், ஒரு நாள் வழக்காடிக்கொண்டிருக்கும் போது அவருக்கு மாரடைப்பு வருகிறது. அதில் இருந்து குணமான பின் தன் சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு (அவரது Ferrari உட்பட), அவர் காணாமல் போகிறார். சில ஆண்டுகளின் பின் அவரது உதவியாளரான John ஐத் தேடி வருகிறார்.

வாழ்வின் அர்த்தத்தைத் தேடி இமயமலை வரை சென்ற 53 வயதான Julian அங்கு சில துறவிகளுடன் வாழ்ந்து, எங்கள் வாழ்க்கையை நாம் எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற பாடத்தை கற்றதுடன் 30 வயதுத் தோற்றத்துடன் திரும்பி வந்து John ஐ சந்திக்கிறார். அவர்களின் உரையாடலே இக்கதை.

Julian சொன்னவற்றில் மிகச் சில விடயங்களை இங்கு சொல்கிறேன். நாம் நல்லவற்றை நினைத்தால் நல்லது நடக்கும் என்பார்கள். ஆனால் அதை ஒரு மிகச் சிறந்த உதாரணத்துடன் சொல்கிறார். உங்கள் மனதை ஒரு அழகான பூந்தோட்டம் போல பராமரியுங்கள் என்கிறார். ஒரு தோட்டத்தை எப்படி மண்ணை பதப்படுத்தி, தண்ணீர் விட்டு, களை பிடுங்கி, சூரிய ஒளி படவைத்து பாதுகாப்பீர்களோ, அப்படியே உங்கள் மனதிலும் நல்ல எண்ணங்களை மட்டும் வைத்திருங்கள் என்கிறார்.

அதேபோல் எதைக்கேட்டாலும் நாம் சாப்பிடக்கூட நேரம் இல்லை என்று ஓடிக்கொண்டே இருக்கிறோம். ஒரு மோட்டார் வண்டியில் போகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு எரிபொருள் நிரப்பாமல் தொடர்ந்து ஓட முடியாதுதானே?. அதே போலத்தான், ஒவ்வொரு நாளும் எழுந்தவுடன் அந்த நாள் செய்ய வேண்டியவற்றை மனத்தில் ஒழுங்கு படுத்திவிட்டு எங்களுக்குத் தேவையானதை செய்யவேண்டும் என்கிறார்.

நறுமணம் நிறைந்த ரோஜாப்பூவை யாரிடமாவது கொடுத்தபின், எங்கள் கைகளிலும் அந்த நறுமணம் எஞ்சி இருப்பதைப் போல, நாங்கள் செய்யும் உதவிகள் எங்களுக்கும் பலன் தரும் என்கிறார்.

இப்படியாக எங்கள் வாழ்க்கையை ஒரு மன அழுத்தம் இல்லாமல் சீராக வாழ்வதற்கேற்ற சில வழிமுறைகளை இந்தப் புத்தகத்தில் காணலாம். ஒரு தடவை வாசித்துப் பாருங்களேன். நீங்கள் வாழ்வை அணுகும் கோணம் வித்தியாசமாக மாறலாம்.

## குத்து with கொத்து, 2022




**Kuthu with Kothu Trivia winners**

1) Ajanthan Thalaiyasingam
2) Jasanthan Vinayagamoorthy
3) Khabilan Rukmanikanthan

The Kuthu with Kothu event was very fun and was a great opportunity for us to meet new friends. We enjoyed the trivia, and look forward to another event similar to this. - **Thanusaya Ajanthan**

**DISCLAIMER:** *This newsletter is for inf ormational purposes only. Content of the articles represent the views of the respective authors and the Canberra Tamil Association takes no responsibility for the accuracy of the information in the articles published in this newsletter.*

# உன்னோடு வாழ்தல் அரிது

யோகேஸ்வரி கணேசலிங்கம்

'ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்

இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்

என்நோ(வு) அறியாய் இடும்பைகூர் என்வயிறே

உன்னோடு வாழ்தல் அரிது'

இப்பாடல் ஒளவைப்பிராட்டியினால் பாடப்பட்டது. புலவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் தேடித் தேடி ஊர் ஊராகச் செல்வார்கள். உணவு கிடைக்காத நேரங்களில் பட்டினி கிடக்க வேண்டிவரும். வெறும் வயிற்றோடு பல நாட்கள் இருக்கவேண்டிய நிலையும் ஏற்படும். அதைப்போலவே சில சமயங்களில் பல சுவை உணவும் கிடைக்கும். உணவு கிடைக்காதபோது பட்டினி இருப்பதும் கஷ்டம், உணவு கிடைக்கும்போது இரண்டு, மூன்று வேளைக்குச் சேர்த்துச் சாப்பிடுவதும் முடியாத காரியம். எங்கள் வயிறு வைத்ததுதான் சட்டம். இதை எல்லோரும் அனுபவித்திருப்போம். பட்டினி இருப்பவர்களுக்குத்தான் கூடுதலாக இந்த அனுபவம் ஏற்படும்.

வயிறே எனது வருத்தத்தை நீ அறிகிறாய் இல்லை, பசி இருக்கிறாயும் இல்லை, கூடுதல் உணவை இருக்கிறபோது சேமித்து வைக்கிறாயும் இல்லை, என்னைப் பாடாய்ப் படுத்துகிறாய், என்னால் உன்னோடு வாழமுடியாது என்று புலவர் சலிப்புடன் கூறுகிறார்.

இன்றைய தாயக நிலையைப் பார்க்கும்போது இந்தப் பாடல் எனது நினைவுக்கு வந்தது. உணவுப் பொருட்கள் கிடையாமையால் வயிற்றைக் கட்டி அழ முடியாது தவிக்கும் எமது உறவுகள் படும் பாடு ஒளவைப்பிராட்டி கூறியதை வெளிப்படுத்துகிறது.

## விக்ரம்: பார்வையாளர்களின் வேண்டுகோளிற்குப் பதிலா?

- ***மீனாட்சி சவரிமுத்து***

சென்ற பதிப்பில் ராகவன் 'Pan-Indian' படங்களைப் பற்றி எழுதினார். அந்தக் கட்டுரையில் விதவிதமான வெற்றிப் படங்கள் 'கொலிவுட்' அல்லது 'டொலிவுட்' படம் என்று அழைக்கப்படாமல் 'pan-Indian' என்று அழைக்கப்படுகின்றன என்றும். இதனால், இந்த வெற்றிப் படங்களின் பிராந்திய அடையாளம் இழக்கப்படுகிறது என்றும் கூறியிருந்தார். மேலும், ராகவன் Avengers போன்ற சில அமெரிக்கப் படங்கள் 'Pan-World' படங்கள் என்று எழுதினார். இந்தக் கருத்து எனக்குள் பல கேள்விகளை எழுப்பியது: நாங்கள் எப்படி தமிழ் சினிமாவில் உள்ள பிராந்திய பண்புகளை அடையாளம் செய்யலாம்? ஒரு 'Pan-Indian' அல்லது 'Pan-World' படம் என்றால் என்ன?




அண்மையில், விக்ரம் படம் உலகம் முழுவதும் வெளியிடப்பட்டது. இப்படம் பல காரணங்களினால் கவனிக்கத்தக்கது. முதலாக, இந்தப் படத்தின் முக்கிய நடிகர், கமலஹாசன், 2018ற்குப் பின் நடித்த முதல் படம் இது. மேலும் விக்ரம் பல பிரபல நடிகர்கள் ஒன்று சேர்ந்து நடித்த ஒரு 'mass' படமாக அமைகிறது. தமிழ் மற்றும் மலையாள சினிமாவில் பிரபலமான நடிகர்களான விஜேய் சேதுபதி, மற்றும் பகட் பாசில் இந்தப் படத்தில் கமலஹாசனுடன் இணைந்துள்ளனர். 2022ல் வெளிவந்த விக்ரம் படம் நாற்பது ஆண்டுகளுக்கு முன் வந்த விக்ரம் (1986) படத்தின் தொடர்படமாக வெளிவிடப்பட்டது. மேலும் குறிப்பிடத்தக்க இயக்குனர் லோகெஷ் கனகராஜின் 2018 வெளியீடான கைதி படத்தின் தொடர்படமாகவும் இது அமைகிறது.

விக்ரம் ஒரு குறைகள் அற்ற படமல்ல. என்றாலும், விக்ரம், ராகவன் எழுதிய 'Pan-World' படத்திற்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. இந்தப் படத்தின் வகை (genre) மற்றும் aes-thetic ஒரு Hollywood Action படத்தினை ஒத்ததாக உள்ளது. இப்படத்தின் உரை அதிக அளவில் ஆங்கிலத்தில் உள்ளதால், இது சர்வதேச பார்வையாளர்களைக் கவரக் கூடியதாக உள்ளது. மேலும் ராகவன் கூறியது போல் Avengers போன்ற சர்வதேச வெற்றித்தொடர்களின் மரபான 'cinematic universe' ஒன்றை விக்ரம் படத்தின் மூலம் கனகராஜ் உருவாக்குகிறார். Cinematic universe என்றால் பல படங்கள் ஒரே உலகில் இருக்கலாம். ஒரே கதாப்பாத்திரங்களும் (characters), நிகழ்வுகளும் (plot points), பல படங்களில் இடம்பெறலாம். விக்ரம் படத்தில் இடம்பெறும் பல பாத்திரங்கள் 'கைதி' படத்திலும் வருகின்றனர். மேலும் விக்ரம் 2 ல் இவ்வாறான வேறு பல பாத்திரங்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன. இந்த படத்தின் வெளியீட்டின் மூலம் தமிழ் சினிமா ஒரு 'சிக்கலான' சினிமாவிற்குள் புகுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குலக ஊடகங்கள் (western media) இந்திய சினிமாவில் தமது தாக்கத்தை எந்த அளவிற்கு ஏற்படுத்துகின்றன என்பது சுவாரசியமானது. Netflix, Amazon Prime போன்ற streaming தளங்கள் ஆங்கில மொழிக் குறுந்திரை உள்ளடக்கங்களை (English language television shows) மென்மேலும் 'சினிமா மயப்படுத்தும்' இந்த தருணத்தில் தமிழ் உட்பட பல்வேறு மொழிகளிலும் மேலும் சிக்கலான குறுந்திரை மற்றும் சினிமா உள்ளடக்கத்தை பார்வையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். சிக்கலான குறுந்திரை உள்ளடக்கம் என்பது ஒரு புதிய கோட்பாடு. மேற்குலக ஊடகங்களால் பிரபல்யம் ஆக்கப்பட்ட இந்தக் கோட்பாடு மென்மேலும் சிக்கலான கதைக்கருக்களையும் (plotlines) பாத்திரமாக்கல்களையும் (characterisation) உள்ளடக்கும். இதனால் பார்வையாளர்கள் முன்னைய கிளைக்கதைகளிலும் (episodes) அவற்றின் உள்ளடக்கத்திலும் பலமான ஆர்வம் கொண்டிருக்க வேண்டியிருக்கும். விக்ரம் தமிழ் சினிமாவின் மாஸ் கதாநாயகன் (mass hero) படவகையை ஆங்கில மொழி சினிமா மற்றும் குறுந்திரையின் சிக்கலான கதைக்கரு உடனும் பாத்திர நடைவில் (character arcs) உடனும் சமச்சீர் செய்கிறது.

நீண்ட மற்றும் சிக்கலான உள்ளடக்கத்தை தமிழ் சினிமா தரவேண்டும் என்ற பார்வையாளர்களின் வேண்டுகோளிற்கு இந்த cinematic universe தான் அது தரும் பதிலோ?

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# Your future is in your hands - *Arjuna Segarajasekeran*



*Arjuna Segarajasekeran moved to Australia in 2005 to study for a Bachelor of Business Administration at the University of Canberra; since graduating, Arjuna has worked in the FMCG, Retail, Education and Professional services industry. Arjuna currently works at PriceWaterhouseCoopers as an Operations Manager.*

**We asked Arjuna why he chose this field of work and how he likes his job...**

It was hard to find work as an international student. I was very fortunate to find kind and supportive leaders who saw potential and allowed me to work and grow professionally. I am forever grateful for those leaders. I chose my current field because I can now help students find meaningful work opportunities and help them find employment post-graduation. As I passionately feel that it's my turn to help the next generation.

**Do you have any thoughts you would like to share with the community?**

***"The best way to predict the future is to create it" - Abraham Lincoln***

We as parents are at crossroads with our children in advising them and supporting them with their choice of education and career to help them have a secure future. I remember I had three options of study in my final years of school: maths, biology and commerce; however, now our kids have an array of options from coding, cyber to food technology, and everything in-between.

So what can a parent do to support their children in making sure they are future work ready? Here are my three tips for you!

1) Technology

No matter what profession you choose, you will face the need to work with technology. We will need to understand and work with virtual reality, wearable biomedical technology, datacentric artificial intelligence, and Metaverse, to name a few. Encourage your children to be curious and learn more about technology.

2) Soft Skills

As reliance on technology increases, our children miss out on opportunities to interact with people in person, especially in this post COVID world. We must encourage them to play a sport, participate in creative arts, or anything else that will help them develop their soft skills.

3) Be agile

In their lifetime, Generation Z are expected to work 18 jobs spanning six careers and live in 15 residences. Generation Z ("Gen Z") refers to the generational cohort following millennials, born between the late 1990s and early 2010s. Gen Z's mindset is very different from the traditional norms, which has worked and helped many to have successful careers. The more agile we are, the more agile they will become and equip themselves to be ready to face the future of work. Agility will also help us and their mental health, which is extremely important.

In summary, let's allow them to spread their wings and experience a more cross-culture, technology-driven, and, most importantly, evolving world. Let's help them create their future so we are not awake at night predicting their future.

For more information: https://www.pwc.com.au/important-problems/future-of-work-design-for-the-future.html




## Volunteering opportunities

**Bunnings sausage sizzle**

Our next sausage sizzle fundraiser will be happening at Bunnings Belconnen on the 17th of September. We would like volunteers to help out on the day. Please contact a CTA to assist for a couple of hours on the day.

## கண்டு பிடியுங்கள்

## கண்டு பிடியுங்கள்! *(பதிப்பு 2)*

போன புதிரின் விடை:

முதல் 1 நிமிடம் எடுப்பவரும், 2 நிமிடம் எடுப்பவரும் போவார்கள். 1 நிமிடம் எடுப்பவர் திரும்பி வருவார். மொத்தம் 3 நிமிடங்கள். பின்பு 7 எடுப்பவரும், 10 நிமிடம் எடுப்பவரும் போவார்கள். 10 நிமிடம் எடுக்கும். 2 நிமிடம் எடுப்பவர் விளக்குடன் திரும்பி வருவார். 2 நிமிடம் எடுக்கும். மீண்டும் 1 நிமிடம் எடுப்பவரும், 2 நிமிடம் எடுப்பவரும் போவார்கள். **மொத்தமாக 17 நிமிடங்கள் எடுக்கும்.**

விடை அனுப்பியவர்களில் சரியான விடை அனுப்பியவர்கள் அனுலன் மற்றும் சுகுமார்.